புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 264 | 30-03-2026 | திங்கள் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 264 | 30-03-2026 | Monday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## மேற்காசிய மோதலால் ஏற்பட்டுள்ள சவால்களை அரசியலாக்க வேண்டாம்“: பிரதமர் மோடி



புதுடெல்லி: மார்ச்.30–

மேற்காசிய மோதலால் ஏற்பட்டுள்ள சவால்களை அரசியலாக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளை பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

மனதின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, “இந்த மார்ச் மாதம் உலகளவில் மிகவும் கொந்தளிப்பாக உள்ளது. கோவிட் காரணமாக உலகம் நீண்டகாலமாக பல பிரச்சினைகளைச் சந்தித்தது நம் அனைவருக்கும் நினைவிருக்கிறது. கரோனா நெருக்கடியைக் கடந்த பிறகு, உலகம் ஒரு புதிய முன்னேற்றப் பாதையில் செல்லும் என்று நாம் அனைவரும் எதிர்பார்த்தோம்.

ஆனால், உலகின் பல்வேறு பகுதிகளில் போர் மற்றும் மோதல் சூழ்நிலைகள் தொடர்ந்து உருவாகி வருகின்றன. தற்போது நமது அண்டை நாடுகளில் ஒரு மாதமாக ஒரு கடுமையான போர் நடந்து கொண்டிருக்கிறது. நமது குடும்ப உறுப்பினர்களில் லட்சக்கணக்கானோர் இந்த வளைகுடா நாடுகளில் வசிக்கின்றனர். குறிப்பாக வளைகுடா நாடுகளில் பணிபுரிகின்றனர். அங்குள்ள ஒரு கோடிக்கும் அதிகமான இந்தியர்களுக்கு அனைத்து விமாத உதவிகளையும் வழங்கி வரும் வளைகுடா நாடுகளுக்கு நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது போர் நடந்து கொண்டிருக்கும் பிராந்தியம், நமது எரிசக்தி தேவைகளுக்கான ஒரு முக்கிய மையமாகும். இது பெட்ரோல், டீசல் தொடர்பாக ஒரு சர்வதேச நெருக்கடியை உருவாக்கி வருகிறது. நமது சர்வதேச உறவுகள், பல்வேறு நாடுகளிடம் இருந்து நாம் பெரும் ஆதரவு, கடந்த பத்தாண்டுகளில் நமது தேசம் கட்டமைத்துள்ள வலிமை ஆகியவை இந்த சவால்களை இந்தியா துணிச்சலுடன் எதிர்கொள்ள உதவியுள்ளது.

நிச்சயமாக இது ஒரு சவாலான காலகட்டம். இன்று மனதின் குரல் மூலம் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த சவாலை வெல்ல வேண்டும் என்று நாட்டு மக்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்த விரும்புகிறேன். இந்த விஷயத்தை அரசியல் மயமாக்குபவர்கள், அவ்வாறு செய்வதைத் தவிர்க்க வேண்டும். இது 140 கோடி குடிமக்களின் ;நலன்கள் தொடர்பான ஒரு விஷயம். இதில் சுயநல அரசியலுக்கு இடமில்லை.

எனவே, வதந்திகளைப் பரப்புபவர்கள், நாட்டுக்கு பெரும் தீங்கை விளைவிக் கின்றனர். நமது நாட்டு மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்குமாறும், வதந்திகளால் தவறாக வழிநடத்தப் படாமல் இருக்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன். அரசாங்கம் வழங்கும் தொடர்ச்சியான தகவல்களை நம்பி அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுங்கள். எப்பொழுதும்போலவே, நமது 140 கோடி மக்களின் வலிமையால் கடந்த கால நெருக்கடி களை நாம் கடந்து வந்ததைப் போல இம்முறையும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வெற்றி பெறுவோம் என்று நான் உறுதியா நம்புகிறேன்” என தெரிவித்துள்ளார்.

# தேர்தல் பிரச்சாரத்தை மார்ச் 31ல் திருவாரூரில் தொடங்குகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை: மார்ச்.30–

தமிழக முதல்வரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின், வரும் 31ம் தேதி மாலை 5 மணிக்கு திருவாரூரில் தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்குகிறார். திமுக தலைமைக் கழகம் இதனை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து மு.க. ஸ்டாலின் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்க உள்ளார்.



இதற்கான தொடர் பிரச்சாரத்தை மார்ச் 31ம் தேதி திருவாரூரில் தொடங்க உள்ளார். திமுக தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து மு.க. ஸ்டாலின், முதற்கட்டமாக திமுக முன்னாள் தலைவர் கருணாநிதியின் ஊரான திருவாரூரில் பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

திருவாரூர் தெற்கு ரத வீதியில் மாலை 5 மணிக்கு இந்த பிரச்சார பொதுக்கூட்டம் தொடங்கும். திருத்துறைப்பூண்டி, திருவாரூர், நன்னிலம், மன்னார்குடி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளின் வேட்பாளர்கள் இதில் கலந்து கொள்வார்கள்.

இதனைத் தொடர்ந்து ஏப். 1ம் தேதி காலை 9 மணிக்கு திருச்சி உழவர் சந்தையில் நடைபெற உள்ள பொதுக் கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், திருச்சி மேற்கு, திருச்சி கிழக்கு, திருவெறும்பூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், திருவரங்கம், மணப்பாறை, முசிறி, துறையூர் ஆகிய தொகுதிகளின் சட்டமன்ற வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

அன்றைய தினம் மாலை 5 மணிக்கு கரூர் பொதுக் கூட்டத்தில் மு.க. ஸ்டாலின் உரையாற்ற உள்ளார். இதில், அரவக்குறிச்சி, கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளின் வேட்பாளர்கள் கலந்து கொள்வார்கள்.

ஏப். 2ம் தேதி காலை 9 மணிக்கு ஈரோட்டில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும், மாலை 5 மணிக்கு கோவை பொதுக்கூட்டத்திலும் மு.க. ஸ்டாலின் உரை நிகழ்த்த உள்ளார்.

# பெரம்பூர், திருச்சி கிழக்கில் விஜய் போட்டி: 234 வேட்பாளர்களும் அறிவிப்பு

சென்னை: மார்ச்.30–

பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிடுகிறார். தி.நகரில் புஸ்ஸி ஆனந்த், கோபிசெட்டிப்பாளையத்தில் செங்கோட்டையன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் நேற்று நடந்த நிகழ்ச்சியில், தவெகவின் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, அக்கட்சியின் வேட்பாளர்களை விஜய் அறிமுகப்படுத்தினார்.

சென்னை பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் தவெக தலைவர் விஜய் போட்டியிடுகிறார். தி.நகரில் புஸ்ஸி ஆனந்த், மயிலாப்பூரில் வெங்கட்ரமணன், வில்லிவாக்கத்தில் ஆதவ் அர்ஜுனா, கோபிசெட்டிப்பாளையத்தில் செங்கோட்டையன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

விஜய் அறிவித்த 234 வேட்பாளர்களின் பட்டியல்:

1. பெரம்பூர் ஜோசப் விஜய், 2. திருச்சி கிழக்கு ஜோசப் விஜய், 3. தி.நகர் புஸ்ஸி ஆனந்த், 4. வில்லிவாக்கம் ஆதவ் அர்ஜுனா, 5. கொளத்தூர் வி.எஸ்.பாபு, 6. ராயபுரம் தாமு, 7. சோழிங்கநல்லூர் ஈ.சி.ஆர் சரவணன், 8. ஆர்.கே.நகர் மரியவில்சன், 9. எழும்பூர் (தனி) ராஜ்மோகன், 10. திரு.வி.க.நகர் (தனி) பல்லவி, 11. மயிலாப்பூர் வெங்கட்ரமணன், 12. கோபிச்செட்டிப் பாளையம் செங்கோட்டையன், 13. திருச்செங்கோடு அருண்ராஜ் ,14. திருப்பரங்குன்றம் சி.டி.ஆர் நிர்மல்குமார், 15. குமாரப்பாளையம் விஜயலெட்சுமி ,16. திட்டகுடி ராஜசேகர் ,17. சைதாப்பேட்டை அருள் பிரகாசம், 18. வால்பாறை ஸ்ரீதரன், 19. லால்குடி கு.ப.கிருஷ்ணன், 20. திருப்பூர் வடக்கு சத்யபாமா, 21. ஆயிரம் விளக்கு ஜே.சி.டி பிரபாகர், 22. கும்மிடிப்பூண்டி விஜயகுமார், 23. பொன்னேரி (தனி) ரவி , 24. திருத்தணி சத்யகுமார், 25. திருவள்ளூர் அருண்குமார், 26. பூந்தமல்லி (தனி) பிரகாசம், 27. ஆவடி ரமேஷ், 28. மதுரவாயில் ரேவந்த், 29. அம்பத்தூர் பாலமுருகன்,

30. மாதவரம் பிரபு, 31. திருவொற்றியூர் செந்தில் குமார், 32. துறைமுகம் சினோரா அசோக், 33. சேப்பாக்கம் டி.செல்வம், 34. அண்ணாநகர் வி.கே.ராம்குமார், 35. விருகம்பாக்கம் சபரி, 36. வேளச்சேரி ஆர்.குமார், 37. ஆலந்தூர் ஹரீஷ்,

38. திருப்பெரும்புதூர் (தனி) தென்னரசு, 9. பல்லாவரம் காமாட்சி,40. தாம்பரம் சரத் குமார்,41.



செங்கல்பட்டு தியாகராஜன், 42. திருப்போரூர் விஜயராஜ், 43. செய்யூர் (தனி) மோகன் ராஜ், 44. மதுராந்தகம் (தனி) எழில் கேத்தரின், 45. உத்திரமேரூர் முனி ரத்தினம், 46. காஞ்சிபுரம் ரஞ்சித் குமார், 47. அரக்கோணம் (தனி) காந்திராஜ், 48. சோளிங்கர் கபில், 49. காட்பாடி சுதாகர், 50. ராணிப்பேட்டை தாஹிரா

51. ஆற்காடு விஜய் மோகன், 52. வேலூர் வினோத் கண்ணன், 53. அணைக்கட்டு வேல்முருகன், 54. கே.வி.குப்பம் (தனி) தென்றல் குமார், 55. குடியாத்தம் (தனி) சிந்து, 56. வாணியம்பாடி சையத் புர்ஹாதின், 57. ஆம்பூர் இம்தியாஸ்

, 58. ஜோலார்பேட்டை முனிசாமி, 59. திருப்பத்தூர் திருப்பதி, 60. ஊத்தங்கரை (தனி) குமரவேல், 61. பர்கூர் முரளிதரன், 62. கிருஷ்ணகிரி முகுந்த் ஆர்.பாண்டியன், 63. வேப்பனஹள்ளி சம்பங்கி, 64. ஓசூர் அம்ப்ரிஷ், 65. தளி சுரேஷ்,

66. பாலக்கோடு கோபி, 67. பென்னாகரம் கஜேந்திரன்.,68. தர்மபுரி சிவன்,69. பாப்பிரெட்டிப்பட்டி திலகவதி,70. அரூர் (தனி) ராகேஷ், 71. செங்கம் (தனி) பாரதிதாசன், 72. விக்கிரவாண்டி விஜய் வடிவேல், 73. திருக்கோவிலூர் பரணி பாலாஜி, 74. உளுந்தூர்பேட்டை சுதாகர், 75. ரிஷிவந்தியம் அசோக், 76. சங்கராபுரம் ஜெகதீசன், 77. கள்ளக்குறிச்சி (தனி) அருள் விக்னேஷ், 78. கெங்கவல்லி (தனி) சுஜாதா, 79. ஆத்தூர் (தனி) செல்வபாரதி, 80. ஏற்காடு (பழங்குடி) ஜே.லெட்சுமி, 81. ஓமலூர் அதியமான், 82. மேட்டூர் கே.செல்வம், 83. எடப்பாடி அருண்குமார், 84. தாராபுரம் (தனி) கௌளரி சித்ரா, 85. காங்கேயம் பி.மணி, 86. பெருந்துறை அருணாச்சலம், 87. பவானி பாலகிருஷ்ணன், 88. அந்தியூர் விஜய் வெங்கடேஷ், 89. பவானிசாகர் (தனி) கலைச்செல்வி, 90. உதகை இப்ராஹிம், 91. கூடலூர் (தனி) தீபக் சாய் கிஷோர், 92. குன்னூர் தங்கராஜூ, 93. மேட்டுப்பாளையம் சுனில், 94. அவிநாசி (தனி) கமலி, 95. திருப்பூர் தெற்கு பாலமுருகன்,

96. பல்லடம் ராம்குமார், 97. சூலூர் என்.எம்.சுகுமார், 98. கவுண்டம்பாளையம் கனிமொழி, 99. கோவை வடக்கு சம்பத் குமார், 100. தொண்டாமுத்தூர் சதீஷ் ராஜூ,

101. கோவை தெற்கு செந்தில்குமார், 102. சிங்காநல்லூர் கிரி, 103. கிணத்துக்கடவு விக்னேஷ், 104. பொள்ளாச்சி ஜி.ராம்நாதன், 105. உடுமலைப்பேட்டை சங்கர், 106. மடத்துக்குளம் திருமலை, 107. பழனி பிரவீன்குமார், 108. ஒட்டன்சத்திரம் மோகன், 109. ஆத்தூர் கலைச்செல்வி, 110. நிலக்கோட்டை (தனி) ஐயனார், 111. நத்தம் ரமேஷ், 112. திண்டுக்கல் நசீர், 113. வேடச்சந்தூர் நாகஜோதி, 114. அரவக்குறிச்சி கார்த்திகேயன், 115. கரூர் மதியழகன், 116. கிருஷ்ணராயபுரம் (தனி) மதன், 117. குளித்தலை பாலசுப்பிரமணியம், 118. மணப்பாறை கதிரவன், 119. திருவரங்கம் ரமேஷ், 120. திருச்சி மேற்கு ராமமூர்த்தி, 121. திருவெறும்பூர் நவல்பட்டு விஜி, 122. மண்ணச்சநல்லூர் சரவணன் 123. முசிறி விக்னேஷ், 124. துறையூர் (தனி) ரவிசங்கர், 125. பெரம்பலூர் (தனி) சிவக்குமார், 126. குன்னம் ரேவதி, 127. அரியலூர் சிவா, 128. ஜெயங்கொண்டம் கவிதா, 129. விருத்தாச்சலம் விஜய், 130. நெய்வேலி ஆனந்த், 131. பண்ருட்டி மணிகண்டன், 132. கடலூர் ராஜ்குமார், 133. குறிஞ்சிப்பாடி ராஜ்குமார், 134. புவனகிரி மகாலிங்கம், 135. சிதம்பரம் பாரி, 136. காட்டுமன்னார்கோயில் (தனி) சீனிவாசன், 137. சீர்காழி (தனி) கோபிநாத், 138. மயிலாடுதுறை அருண்ரஷீத்,139. பூம்புகார் விஜயாலயன்

140. நாகப்பட்டினம் சுகுமார், 141. கீழ்வேளூர் (தனி) செந்தில் பாண்டியன், 142. வேதாரண்யம் கிங்க்ஸ்லி ஜெரால்ட், 143. திருத்துறைப்பூண்டி (தனி) பாண்டியன், 144. மன்னார்குடி ராஜராஜன், 145. திருவாரூர் வீரமணி, 146. நன்னிலம் பிரபாகரன், 147. திருவிடைமருதூர் (தனி) பிரபாகரன், 148. கும்பகோணம் வினோத், 149. பாபநாசம் அசாரூதின், 150. திருவையாறு மணிகண்டன், 151. தஞ்சை சரவணன், 152. ஒரத்தநாடு அரவிந்த், 153. பட்டுக்கோட்டை மதன், 154. பேராவூரணி சந்திர காண்டீபன், 155. கந்தர்வக்கோட்டை (தனி) சுப்பிரமணியன், 156. விராலிமலை முருகேசன்,157. புதுக்கோட்டை ஷரிப், 158. திருமயம் சிந்தாமணி, 159. ஆலங்குடி துறை கந்தசாமி,160. அறந்தாங்கி பர்வேஸ், 161. காரைக்குடி பிரபு, 162. திருப்பத்தூர் ஸ்ரீனிவாச சேதுபதி, 163. சிவகங்கை குழந்தை ராணி நாச்சியார், 164. மானாமதுரை (தனி) இளங்கோவன், 165. மேலூர் மதுரை வீரன், 166. மதுரை கிழக்கு கார்த்திகேயன், 167. சோழவந்தான் (தனி) கருப்பையா, 168. மதுரை வடக்கு கல்லாணை, 169. மதுரை தெற்கு பீட்டர், 170. மதுரை மத்தி முஸ்தபா, 171. மதுரை மேற்கு தங்கப்பாண்டி, 172. திருமங்கலம் சதீஸ், 173. உசிலம்பட்டி விஜய் மகாலிங்கம், 174. ஆண்டிப்பட்டி லெப்ட் பாண்டி

175. பெரியகுளம் (தனி) சபரி, 176. போடி பிரகாஷ்,177. கம்பம் ஜெகந்நாத் மிஸ்ரா,178. ராஜபாளையம் ஜெகதீஸ்வரி,179. திருவில்லிபுத்தூர் கார்த்திக்,180. சாத்தூர் அஜித்,181. சிவகாசி கீர்த்தனா,182. விருதுநகர் செல்வம், 183. அருப்புக்கோட்டை கார்த்திக் குமார், 184. திருச்சுழி சமயன், 185. பரமக்குடி (தனி) கோபிநாதன், 186. திருவாடானை ராஜீவ், 187. ராமநாதபுரம் சாகுல் ஹமீது, 188. முதுகுளத்தூர் மலர்விழி, 189. விளாத்திக்குளம் காசிராம், 190. தூத்துக்குடி ஸ்ரீநாத், 191. திருச்செந்தூர் முருகன், 192. திருவைகுண்டம் சரவணம், 193. ஒட்டப்பிடாரம் (தனி) மதன் ராஜா, 194. கோவில்பட்டி பாலசுப்பிரமணியன், 195. சங்கரன்கோவில் (தனி) ராமராஜன், 196. வாசுதேவநல்லூர் (தனி) அமுதராணி

197. கடையநல்லூர் ஜலீல், 198. தென்காசி ராஜபிரகாஷ், 199. ஆலங்குளம் விபின்,200. திருநெல்வேலி ஆர்.எஸ்.முருகன், 201. அம்பாசமுத்திரம் ராஜகோபால், 202. பாளை மரிய ஜாண்,203. நாங்குநேரி ரெட்டியார்பட்டி நாராயணன், 204. ராதாபுரம் சதீஷ் கிறிஸ்டோபர், 205. கன்னியாகுமரி மாதவன், 206. நாகர்கோவில் பெர்வின் கிங்ஸ், 207. குளைச்சல் பிரேம் அலெக்ஸ், 208. பத்மநாபபுரம் கிருஷ்ணகுமார், 209. விளவங்கோடு மைக்கேல், 210. கிள்ளியூர் சபின்

211. திருவண்ணாமலை அருள் ஆறுமுகம், 212. கீழ்பெண்ணாத்தூர் ராஜா, 213. கலசப்பாக்கம் ஏழுமலை, 214. போளூர் அபிஷேக், 215. ஆரணி வெங்கடேசன் குமார், 216. செய்யாறு மோகன், 217. வந்தவாசி (தனி) உதயகுமார்,

218. செஞ்சி சந்திரசேகரன், 219. மயிலம் விஜய் நிரஞ்சன், 220. திண்டிவனம் (தனி) சக்திவேல், 221. வானூர் (தனி) சுரேஷ், 222. விழுப்புரம் மோகன்ராஜ், 223. சங்ககிரி செந்தில்குமார், 224. சேலம் மேற்கு லெட்சுமணன், 225. சேலம் வடக்கு சிவக்குமார், 226. சேலம் தெற்கு பார்த்திபன், 227. வீரபாண்டி பழனிவேல், 228. ராசிபுரம் (தனி) லோகேஷ் தனபால், 229. சேந்தமங்கலம் (பழங்குடி) சந்திரசேகர், 230. நாமக்கல் திலீப், 231. பரமத்திவேலூர் நந்தகுமார், 232. ஈரோடு கிழக்கு பாலாஜி, 233. ஈரோடு மேற்கு ஆனந்த் மோகன், 234. மொடக்குறிச்சி சண்முகம்

## 43 வேட்பாளர்களை அறிவித்தது ‘புதிய தமிழகம்’ ஒட்டப்பிடாரத்தில் கிருஷ்ணசாமி போட்டி

சென்னை: மார்ச்.30–

ஒட்டப்பிடாரம் தொகுதியில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் அவரது மகன் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர்.

புதிய தமிழகம் கட்சியின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை அக்கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ளார். இந்தப் பட்டியலில் 43 வேட்பாளர்கள் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இதன்படி, ஒட்டப்பிடாரம் தொகுதியில் கிருஷ்ணசாமியும், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் நெல்லை தொகுதிகளில் ஷியாம் கிருஷ்ணசாமியும் போட்டியிடுகின்றனர். மேலும், வாசுதேவ நல்லூரில் பால்ராஜ், கடைய நல்லூரில் கவி, நாங்குநேரியில் தமிழ்செல்வி, நிலக்கோட்டையில் பொ.சங்கர், பட்டுக்கோட்டையில் மா.குருமூர்த்தி ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திருவெறும்பூரில் அ.பிச்சைமுத்து, ஆண்டிப்பட்டியில் மகா.இளையராஜா, முசிறியில் மு.சின்னையன், திருவாரூரில் மூ.தியாகராஜன், நன்னிலத்தில் மு.தமிழ்செல்வம், விராலிமலையில் அ.செல்வராஜ், சாத்தூரில் சு.வேல்முருகன் உள்ளிட்ட 43 வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதிமுக கூட்டணியில் பேச்சுவார்த்தை நடத்திவந்த புதிய தமிழகம் கட்சி, தொகுதிகள் எண்ணிக்கை குறித்த இழுபறியால் தனித்துப் போட்டியிட முடிவு செய்து களமிறங்கியுள்ளது.

# மக்கள் தொகை அடிப்படையிலும் குடியிருப்புகள் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளாட்சிகளில் தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்ய ஏஐடியூசி உள்ளாட்சி பணியாளர் சம்மேளனம் கோரிக்கை

திருச்சி மார்ச் 30

திருச்சி பெரிய மீழகுபாறை யில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இயங்கும் ஜனகம் இஸ்மாயில் அரங்கில் ஏஐடியூசி தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளனம் மாநில குழு கூட்டம் நடைபெற்றது

இக் கூட்டத்திற்கு ஏஐடியூசி தமிழ்நாடு உள்ளாட்சி துறை பணியாளர் சம்மேளன மாநில தலைவர் நடராஜன் தலைமை வகித்தார் மாநில பொதுச் செயலாளர் இராமச்சந்திரன் நடைபெற்ற வேலைகள் கூறித்து பேசினார் நடைபெற்ற வேலைகள் கூறித்து விவாதித்து ஏற்று கொள்ளபட்டது . இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் நல்லக்கண்ணு அவர்கள் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.



நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் பாசிச பாஜக அணியை முறியடிக்க மதச்சார்பற்ற கூட்டணிக்கு ஆதரவளிக்க முடிவு செய்யப்பட்டது.

நமது வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வது என்றும், தேர்தல் நிதி ஒவ்வொரு தொழிலாளியும் ரூ.100 வழங்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. ஏப்ரல் 5ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும்

தமிழ்நாட்டில் மக்கள் தொகை அடிப்படையிலும் குடியிருப்புகள் எண்ணிக்கைக்கு ஏற்ப உள்ளாட்சிகளில் தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.

தூய்மை பணியாளர் அனைவரையும் நிரந்தரம் செய்ய வேண்டும்.

ஒப்பந்தமுறை, அவுட் சோர்ஸிங், மற்றும் சுயநிதிக்குழு மூலம் நியமனம் போன்றவற்றை ஒழிக்க வேண்டும்.7. தொழிலாளர் நலத்துறை 11.10.2017ல் வெளியிட்ட அரசாணை 2ஞி எண் 62ன்படி உள்ளாட்சிகளில் குறைந்த பட்ச ஊதியம் வழங்க வேண்டும்.

கொரனா நிதி உடனடியாக அனைத்து தூய்மை பணியாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் தேர்தல் பணியில் உயிர் இழந்த ஒப்பந்த தூய்மை பணியாளர் மணிகண்டன் குடும்பத்திற்கு ரூ.25 லட்சம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அவரது மனைவிக்கு அரசு வேலை வழங்க வேண்டும்.

உள்ளாட்சிகளில் பெண் தொழிலாளர்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகாமல் தடுக்க ஒவ்வொரு உள்ளாட்சிகளிலும் புகார் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சின்னசாமி ஞிக்ஷீ. சாந்தி செல்வராஜ், தண்டபாணி, மீனாள் சேதுராமன், சுரேஷ். சுப்பிரமணியன், மணி, சங்கையா, கண்ணன், முருகன், லெட்சுமணன், முருகன், திருநாவுக்கரசு. முனியன், செல்வி, அருள். தனசேகரன், மணி, பெரியசாமி உள்ளிட்ட மாநில குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் மாநில பொருளாளர் பீட்டர் துரைராஜ்.நன்றி கூறினார்



பெயர்: R. **கதிரவன்** BE.,
தந்தை பெயர்: ராமசந்திரன்
தாய் பெயர்: தேன்மொழி
மனைவி பெயர்: பூர்ணிமா
குழந்தைகள் பெயர்: கனிஷ்கா, ரோஷிகா
பிறந்த தேதி: 30/11/1992
படிப்பு: BE ( ME )
சொந்த ஊர்: பொன்னம்பலம்பட்டி, (வையம்பட்டி)
தொழில்: பேக்கரி உரிமையாளர்
அரசியல் அனுபவம்: 5 ஆண்டுகளுக்கு மேலாக விஜய் மக்கள் இயக்கத்தில் மக்கள் பணிகளை மேற்கொண்டார். தளபதி அவர்களின் நம்பிக்கைகக்கு உரியவரானார். தற்போது மணப்பாறை சட்டமன்ற தொகுதியின், தமிழக வெற்றிக் கழகத்தின் வெற்றி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். மக்களுக்கு நல்ல அறிமுகம் ஆனா நிலையில் வெற்றி வாய்ப்பு அதிகமாக உள்ளது என தொகுதி மக்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

# அனைத்து சமூக மக்களின் பிரச்சினைகளுக்கு முன் நின்று போராடி வரும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும்.

தி.மு.கவுக்கு ஏன் வாக்களிக்கக் கூடாது என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி மேற்கு மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி வேட்பாளரமான வ. வினோத் கண்ணா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.



திமுக தலைமைப் பொறுப்புகள் மற்றும் முக்கிய பதவிகள் கருணாநிதி குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட்டு வருகிறது.இது மற்ற திறமையான தொண்டர்களின் வளர்ச்சியைத் தடுப்பதாகவும் குற்றம் சாட்டுகள் எழுகின்றனர்.

சட்டம் ஒழுங்கு மற்றும் 'அராஜகம்'

தி.மு.க ஆட்சியில் இருக்கும்போது நில அபகரிப்புப் புகார்கள் மற்றும் கட்சித் தொண்டர்களின் தலையீடு உள்ளூர் மட்டத்தில் அதிகமாக இருக்கும் என்பது நீண்ட கால விமர்சனமாகவே உள்ளது. 'கட்டப் பஞ்சாயத்து' போன்ற கலாச்சாரம் மீண்டும் தலைதூக்கும் என்ற அச்சம் ஒரு தரப்பு மக்களிடையே நிலவுகிறது.

ஊழல் புகார்கள்

கடந்த காலங்களில் 2G ஸ்பெக்ட்ரம் வழக்கு போன்ற பெரிய அளவிலான ஊழல் புகார்கள் அக்கட்சியின் மீது சுமத்தப்பட்டன. தற்போதைய ஆட்சிக் காலத்திலும் அமைச்சர்கள் மீதான அமலாக்கத்துறை விசாரணைகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் உள்ளன. நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்

தேர்தல் நேரத்தில் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றப் படவில்லை. பழைய ஓய்வூதியத் திட்டம், நீட் தேர்வு ரத்து போன்றவை) முழுமையாக நிறைவேற்றவில்லை இதனால் அதிருப்தியில் அரசு ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே உள்ளது.

விலைவாசி உயர்வு மற்றும் கட்டண உயர்வு

மின்சாரக் கட்டண உயர்வு, சொத்து வரி உயர்வு மற்றும் ஆவின் பால் விலை உயர்வு போன்றவை நடுத்தர மற்றும் ஏழை எளிய மக்களைப் பாதிப்பதாக உள்ளது . இது இந்த ஆட்சியின் மீதான அதிருப்தியாகப் பார்க்கப்படுகிறது. வன்னியர்களுக்கு 10.5 இட ஒதுக்கீடு வழங்காமல் திமுக துரோகம் செய்தது. வன்னியர்களை பெரும்பான்மையாக வாக்காளர்களாக கொண்டுள்ள அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதியில் வன்னியர்களுக்கு சீட்டு வழங்காமல் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. எனவே வன்னியர் உள்ளிட்ட அனைத்து சமூக மக்களின் பிரச்சினைகளுக்கு முன் நின்று போராடி வரும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## அரியலூர் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் லதா பாலு சுயவிவரம்:



அரியலூர் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட திமுக சார்பில் இலதா பாலு என்பவர் அறிவிக்கப் பட்டுள்ளார். இவர் தற்பொழுது திமுக மாவட்ட துணைச் செயலாளராக பதவி வகித்து வருகிறார்.
பெயர்: இலதாபாலு
கல்வி : எம்.ஏ
பிறந்த நாள்: 26.06.76
கணவர்: அ.பாலசுப்ரமணியன்/விவசாயம்
மகன் : அகிலன்/அஞ்சலக ஊழியர்

இவர் கடந்த 2001 மற்றும் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெற்று, திருமானூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலை வராக பதவி வகித்தவர்.

மேலும் அரியலூர் மாவட்ட திமுக மகளிர் அணி அமைப்பாளராக 3 முறை பதவி வகித்தவர்.

மேலும் ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டமாக இருந்த பொழுது, மாவட்ட மகளிர் அணி செயலாளராகவும் பதவி வகித்துள்ளார்.

# ஈரோடு கிருஷ்ணம் பாளையம் சித்தன் நகர் அருள்மிகு ஸ்ரீ அழகு மாரியம்மன் கோவில் திருவிழா..

## சிறப்பாக நடைபெற்ற தீர்த்த திருவிழா..



ஈரோடு. மார்ச். 30

ஈரோடு கிருஷ்ணம் பாளையம் அருள்மிகு ஸ்ரீ அழகு மாரியம்மன் கோவில் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் அருகே உள்ள கிருஷ்ணம் பாளையம் சித்தன் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அழகு மாரியம்மன் கோவில் பங்குனி மாத பெரும் திருவிழா மற்றும் 26 ஆம் ஆண்டு தீர்த்த ஊர்வலம் விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த 24/3/2026 செவ்வாய்க்கிழமை தொடங்கி நடைபெற்று வரும் இந்த திருவிழா, வருகின்ற5/4/2026 ஆம் தேதி வரை சிறப்பாக நடைபெற உள்ளது.

கணபதி ஹோமம் செய்து பூச்சாற்றுதலுடன் தொடங்கிய இந்த கோவில் விழாவில், அன்னதானம் வழங்குதல், மாவிளக்கு எடுத்தல், என தினம் தோறும் ஒவ்வொரு நாளும் பல்வேறு சிறப்பு பூஜைகள் அம்மனுக்கு செய்யப்பட்டு பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் அம்மனை தரிசித்து வணங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் நேற்று காலை கிருஷ்ணம்பாளையம் சித்தன் நகர் பகுதி பொதுமக்கள் நூற்றுக்கணக்கானோர் அம்மன் சக்தி அழைத்து ஊர்வலமாக சென்று ஈரோடு சின்ன மாரியம்மன் மற்றும் பெரிய மாரியம்மன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் செய்தனர்

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை அறிமுக சரி அழகு மாரியம்மன் கோவில் திருவிழா குழுவினரும் மற்றும் ஊர் பொதுமக்களும், பக்த கோடிகளும் சிறப்பாக செய்து வருகின்றனர்.



விழுப்புரம் மாவ்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள சிறுவர் பூங்காவில் தோட்டக்கலைத்துறை சார்பில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு 100 சதவீதம் வாக்களிப்பதனை வலியுறுத்தும் விதமாக காய்கறிகள் மற்றும் பழங்கள் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ள விழிப்புணர்வு அரங்கினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், திறந்து வைத்து வாக்களிப்பதன் அவசியம் குறித்து துண்டு பிரசுரங்களை முதல் தலைமுறை வாக்காளர்களுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் உதவி ஆட்சியர்வெங்கடேஷ்வரன், இணை இயக்குனர் / திட்ட இயக்குனர் மகளிர் திட்டம் செந்தில்வடிவு, விழுப்புரம் தேர்தல் நடத்தும் அலுவலர் முருகேசன், தோட்டக்கலைத்துறை, துணை இயக்குனர் அன்பழகன் உட்பட பலர் உள்ளனர்.

# புதிய தமிழகம் கட்சியுடன் நாங்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை

## எடப்பாடி பழனிச்சாமி

சென்னை: மார்ச்.30–

புதிய தமிழகம் கட்சியுடன் நாங்கள் நேரடியாக பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று எடப்பாடி பழனிச்சாமி கூறியுள்ளார். வேறு ஒருவர் மூலமாக அவர் கேட்ட 510சீட்டுகளையும் தர முடியாது என நாங்கள் கூறிவிட்டோம்" கிருஷ்ணசாமி கூறிய குற்றச்சாட்டுக்கு இபிஎஸ் பதில் அளித்துள்ளார்.

# அரியலூர்- லட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் நந்தியம்பெருமான் சுயசாம்பிகை திருக்கல்யாணம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அரியலூர். மார்ச்.30–

அரியலூர் லட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் நந்தியம்பெருமான் சுயசாம்பிகை திருக்கல்யாணம் வெகு விமர்சையாக நடைபெற்றது. திருக்கல்யாணத்தைக் காணத் தமிழகம் மட்டுமின்றி வெளிமாவட்டங்களிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்



அரியலூர் மாவட் டம் திருமழபாடியில் அமைந்துள்ள வைத்திய நாதசுவாமி திருத்தலத்தில் சிவபெருமான் தாமே முன்னின்று நந்தியெம்பெருமானுக்குத் திருக்கல்யாணம் செய்து வைத்த புனித தலமாகும். இத்தலம் கொள்ளிடம் ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது இந்த தலம் அப்பர், சுந்தரர், திருஞான சம்பந்தரால் பாடல் பெற்றதும், வசிஷ்டர், அகஸ்தியர் முனிவரால் பூஜிக்கப் பெற்ற புனித தலமாகும்.. இந்தக் கோயிலில் வியாக்ர பரத முனிவரின் புதல்வி சுயசாம்பிகை தேவியருக்கும் திருநந்தியெம் பெருமானுக்கும் ஆண்டு தோறும் பங்குனிமாதம் புனர்பூச நட்சத்திரத்தில் திருக்கல்யாண நிகழ்ச்சி நடைபெறும். நந்தி திருமணம் பார்த்தால் முந்தி திருமணம் நடக்கும் என்பது ஐதீகம்

புனர்பூச நட்சத்திர நாளான இன்று கோவில் முன்புறம் செல்லும் கொள்ளிடம் ஆற்றில் முதல் முறையாக நந்தியம் பெருமான் திருக்கல்யாணம் நடைபெற்றது. திருமண மேடையில் நந்தியம்பெருமான் மற்றும் சுயசாம்பிகை தேவியார் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்

மஞ்சள், சந்தனம், விபூதி, தயிர், பால் போன்ற பொருள்களால் தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு தீபாராதனையும் நடைபெற்றது.இதனையடுத்து மணமக்களுக்கு புத்தாடை அணிவித்து மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டது

பின்னர் யாக பூஜையுடன் வேத வித்வான்கள் வேத மந்திரங்கள் முழங்க, நாதஸ்வர இன்னிசையுடன் லட்சக்கணக்கான பக்தர்கள் முன்னிலையில் மணமகள் சுயசாம்பிகை தேவியர் கழுத்தில் மணமகன் நந்தியெம்பெருமான் மாங்கல்யம் அணிவித்து பக்தர்கள் அட்சதை தூவ திருக்கல்யாணம் சிறப்பாக நடைபெற்றது.

நந்தியம்பெருமான் திருமணத்தினை பொதுமக்கள் காண, தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம் சார்பில் திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருமானூர் உள்ளிட்ட பல நகரங்களிலிருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப் பட்டன. இவ்விழாவில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்

## அரியலூர் சட்டமன்ற தொகுதி தமிழக வெற்றிக் கழக வேட்பாளர் சுயவிவரம்:



பெயர்: M. **சிவக்குமார்**
கல்வி : MSC
தொழில்: விவசாயம்
பிறந்த நாள்: 22.05.1977
மனைவி ஈஸ்வரி (House wife)
2 மகன்கள்
இவர் 28 ஆண்டுகளுக்கு மேலாக விஜய் ரசிகர் மன்றத்தில் மாவட்ட தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

# திருவள்ளூர் அடுத்த செவ்வாப்பேட்டையில் அரசு பேருந்து மீது கார் மோதிய விபத்தில் கணவன் மனைவி பலி :

## பேத்திகள் அதிர்ஷ்டவசமாக உயிர்த்தபினர் :

திருவள்ளூர் மார்ச் 30 :

திருவள்ளூர் அடுத்த வேப்பம்பட்டு பாலாஜி நகரை சேர்ந்தவர் ரவிச்சந்திரன். (65). இவரது மனைவி கீதா (56). இவர்கள் தங்களது மகன் வயிற்று பேத்திகளுடன் திருவள்ளூரில் உள்ள கோயிலுக்கு செல்வதற்காக காரில் வந்து கொண்டிருந்தனர்.



செவ்வாபேட்டை பேருந்து நிறுத்தம் அருகே வந்து கொண்டிருந்தபோது அரசு பேருந்து மீது கார் மோதிய விபத்தில் காரில் சென்ற ரவிச்சந்திரன் சம்பவ இடத்திலேயே பலியானார். பலத்த காயமடைந்த அவரது மனைவி கீதா மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த விபத்தில் காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்த அவருடைய பேத்திகள் இருவர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பினர்.கார் இயக்கிய ரவிச்சந்திரன் மாரடைப்பு ஏற்பட்டு கார் கட்டுப்பாட்டை இழந்து விபத்து நடந்ததா என்பது குறித்து பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## என்.ஆர்.காங்கிரசில் இணைந்தார் முனைவர் கண்ணபிரான்: முதல்வர் ரங்கசாமியிடம் வாழ்த்துப் பெற்றார்.



புதுச்சேரி: மார்ச்.30–

மங்கலம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த முக்கியப் பிரமுகரான முனைவர் கண்ணபிரான், தனது ஆதரவாளர்களுடன் லட்சிய ஜன நாயக கட்சியிலிருந்து விலகி என்.ஆர். காங்கிரஸ் கட்சியில் நேற்று அதிகாரப்பூர்வமாக இணைந்தார்.

புதுச்சேரி முதலமைச்சர் மற்றும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரங்கசாமி அவர்களை நேரில் சந்தித்த அவர், தனக்குக் கட்சியினர் முன்னிலையில் வரவேற்புப் பெற்றார். இந்தச் சந்திப்பின் போது, முதல்வர் ரங்கசாமிக்கு அவர் வெண்கல முருகன் சிலை ஒன்றை நினைவுப் பரிசாக வழங்கினார்.

இந்த நிகழ்வின் போது ஏராளமான கட்சித் தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உடனிருந்தனர். மங்கலம் தொகுதி அரசியலில் இந்த இணைப்பு ஒரு முக்கிய மாற்றமாகக் கருதப்படுகிறது.

## காமராஜ் நகர் தொகுதியில் கூட்டணி கட்சி சார்பில் வேட்பாளர் அறிமுக கூட்டம் ஜோஸ் சார்லஸ் மார்டினுக்கு மக்களின் உற்சாக வரவேற்பு...





புதுச்சேரி, மார்ச்.30–

லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள், காமராஜ் நகர் தொகுதிக்கு உட்பட்ட அண்ணாமலை நகர் பகுதியில் நடைபெற்ற கூட்டணி கட்சிகளின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னாள் பாஜக இளைஞர் அணி துணை தலைவர் அஸ்வின் மற்றும் என்.ஆர். காங்கிரஸ் இளைஞர் அணி தலைவர் மற்றும் நிர்வாகிகள் கார்த்திகெயன், அஷோக், தேவா, அருண் சோனி ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

கூட்டத்தில் அப்பகுதி மக்களிடம் லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் அறிமுகப்படுத்தப்பட்டு, தர்பூசணி சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, அப்பகுதி மகளிர் தங்களது பகுதிக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் வளர்ச்சி திட்டங்களை முன்வைத்து பேசினர்.

அனைத்து கோரிக்கைகளையும் கவனமாக கேட்டறிந்த ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்கள், தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவை அனைத்தையும் நிறைவேற்றி தருவதாக உறுதி அளித்தார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் ரிச்சர் ஜான் குமார், பொதுச் செயலாளர் சுரேஷ் துரைசாமி, பாஜக மாநில பிரச்சார பிரிவு அமைப்பாளர் பாண்டி ரவி உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



தமிழக வெற்றிக்கழக தலைவர் தளபதி விஜய் அவர்களின் பேராதருடன் உருளையன்பேட்டை தொகுதியில் நேயம் மக்கள் கழக தலைவர் அண்ணன் G.நேரு(எ)குப்புசாமி MLA அவர்கள் தொடர்ந்து மக்கள் சேவை செய்திட வரிசை எண் : 7 குக்கர் சின்னத்தில் வாக்களியுங்கள்... என்று 28.03.2026... மாலை 6:00 மணி அளவில் புதுப்பாளையம் வார்டு சஞ்சய்காந்தி நகர், பாவேந்தர் வீதி, வ.உ.சி வீதி, தமிழ் மகள் வீதி, போன்ற பகுதிகளில் வீடு வீடாக வாக்கு சேகரிப்பு பணியில் ஈடுபட்டனர்.... மேலும் மேற்கண்ட பகுதி பொதுமக்களின் நலனுக்காக சுத்தமான குடிநீர் வழங்கிட சுதேசி மில் வளாகத்தில் உள்ள இரண்டடுக்கு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து குடிநீரை சுத்திகரிக்கும் வழியில் உவர் நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அதன் மூலம் சுத்தமான குடிநீர் வீடுகளுக்கு விநியோகிக்கும் வகையில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது... மேலும் மேற்கண்ட பகுதியில் மின் பற்றாக்குறையை போக்கும் வகையில் புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டுள்ளது... மேலும் இப்பணிகள் தொடர வாக்களியுங்கள் குக்கர் சின்னத்தில் என்று வாக்குகள் சேகரிக்கப்பட்டது. நிகழ்வில் உருளையன்பேட்டை தொகுதி தமிழக வெற்றிக் கழக பிரமுகர்களும், நிர்வாகிகளும் மற்றும் நேயம் மக்கள் கழக நிர்வாகிகளும், பிரமுகர்களும் என பெரும் திரளாக கலந்து கொண்டனர்.

## உழவர்கரை தொகுதி: குக்கர் சின்னத்தில் போட்டியிடும் சரவணன் தீவிர வாக்கு சேகரிப்பு!



புதுச்சேரி:

புதுச்சேரி உழவர்கரை தொகுதியில் பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகியாக இருந்த சரவணன், இந்த தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுகிறார். அவருக்கு 'குக்கர்' சின்னம் ஒதுக்கப் பட்டுள்ள நிலையில், அவர் தனது ஆதரவாளர்களுடன் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

முக்கிய அம்சங்கள்:

வாக்கு சேகரித்த இடங்கள்: ஜவகர் நகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு, விக்டோரியா நகர், மற்றும் பாவாணர் நகர் ஆகிய பகுதிகளில் வீடு வீடாகச் சென்று சரவணன் வாக்கு சேகரித்தார்.

வேட்பாளரின் உரை: வாக்கு சேகரிப்பின் போது மக்களிடையே பேசிய அவர், "மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே அரசியலுக்கு வந்தேன். உழவர்கரை தொகுதி மக்களின் அன்றாடப் பிரச்சனைகளுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறேன்" என்று குறிப்பிட்டார்.

மக்கள் சேவை: கடந்த காலங்களில் புயல் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தான் உடனடியாக ஓடோடி வந்து உதவியதை நினைவுகூர்ந்த அவர், கட்சி சார்பில் போட்டியிட வாய்ப்பு கிடைக்காவிட்டாலும், மக்கள் தன் மீது வைத்துள்ள நம்பிக்கையினால் சுயேட்சையாகக் களம் இறங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

கோரிக்கை: தன்னை உங்களில் ஒருவனாகக் கருதி, 'குக்கர்' சின்னத்தில் வாக்களித்து பெரும் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என அவர் தொகுதி மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பங்கேற்பாளர்கள்:

இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்வின் போது முன்னாள் கவுன்சிலர், நந்தகுமார், கோபி, ஆறுமுகம், குமார், பழனி, விஸ்வநாதன், சிவா, அறிவாசகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும், இளைஞர்களும், பெண்களும் என நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

## தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் வீடு வீடாக சென்று வாக்காளர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க கோரி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.



புதுச்சேரி, மார்ச்.30–

புதுச்சேரி உப்பளம் தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணியில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளரான அதிமுக மாநில செயலாளர் அன்பழகன் அவர்கள் நேதாஜி 2 சூளைமேடு, வீரன் கோவில் தெரு.அழகர்சாமி வீதி, ரங்கநாதன் வீதி. அந்தோணியர் கோவில் வீதி,பாரதியார் வீதி தேச முத்து மாரியம்மன் கோவில் வீதி.தண்ணீர் கான்வீதி ஆகிய பகுதியில் வீடு வீடாக சென்று வாக்காளர்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க கோரி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

பின்னர் வாக்காளர்களிடம் அதிமுக வேட்பாளர் அன்பழகன் அவர்கள் பேசியதாவது:

புதுச்சேரி உப்பளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வம்பாகீரப்பாளையம், திப்புராயப்பேட்டை பகுதிகளில் மக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிக்கும் போது புதுச்சேரி மாநில அதிமுக செயலாளர் அன்பழகன் பேசியதாவது,

கடந்த ஐந்தாண்டுகாலமாக உப்பளம் தொகுதியின் வளர்ச்சி பின்னுக்கு தள்ளப்பட்டுள்ளது. ஒருவருக்கு கூட இங்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவில்லை. ஆட்டுப்பட்டி, பிரான்சுவா தோட்டம், ராசு உடையார் தோட்டத்தில் இருக்கும் 300 க்கும் மேற்பட்ட கூரை வீடுகளில் ஒரு வீடு கூட கல்வீடாக மாற்றப்படவில்லை. ஆண்டாண்டு காலம் அங்காளம்மன் கோவிலுக்கு சொந்தமான சன்னியாசித் தோப்பில் இருக்கும் மயானகொல்லை இடம் சட்டமன்ற உறுப்பினரின் அனுமதியோடு போலி பத்திரம் தயார் செய்து அபகரிக்கப் பட்டது. நான் சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் தேர்ந் தெடுக்கப்பட்ட உடன் அந்த இடத்தை மீட்டு அங்காளம்மன் கோவிலுக்கு ஒப்படைப்பேன்.

னவர்களின் வாழ்வாதாரம் முழுமையாகபாதிக்கப்பட்டுள்ள நிலையில் மீனவர்கள் சுற்றுலாப்படகு தொழிலையே நம்பி உள்ளனர். அந்த தொழிலை தற்போது அந்நிய சக்திகள் அபகரிக்க துடிக்கின்றன. அந்த தொழிலை மீனவர்களின் நலனுக்காக முழுமையாக பாதுகாப்பேன்.

திப்புராயப்பேட்டை பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள், தலித் கிறிஸ்தவர்கள், அட்டவணை இனத்தை சேர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரம் இந்த ஐந்தாண்டுகாலத்தில் மேம்படுத்தப்படவில்லை. எனது பெரும் முயற்சியால் திப்புராயப்பேட்டை பகுதியில் கட்டி முடிக்கப்பட்ட அடுக்கு மாடி குடியிருப்புகள் இன்னமும் ஏழை, எளிய தகுதியான அட்டவணை இனத்தை சேர்ந்தவர்கள் மற்றும் மீனவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினரின் ஆதரவாளர்கள் 500க்கும் மேற்பட்ட வெளியாட்களிடம் விலைபேசிக்கொண்டு இருக்கின்றனர். நான் சட்டமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப் பட்ட உடன் ஒரே மாதத்தில் அங்கு கட்டிமுடிக்கப்பட்ட அத்தனை குடியிருப்புகளையும் நம் பகுதியில் உள்ள வீடற்ற அட்டவணை இனத்தை சேர்ந்தவர்கள், மீனவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு விருப்பு வெறுப்பின்றி ஒப்படைப்பேன்.

இந்த ஐந்தாண்டுகாலத்தில் இழந்த உப்பளம் தொகுதியின் பெருமையை நிச்சயமாக மீட்டெடுப்பேன். தொகுதியின் வளர்ச்சிக்கே உறுதுணையாக இருப்பேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பிரச்சாரத்தின் போது முன்னாள் கவுன்சிலர் கிருஷ்ணமூர்த்தி, நேத்தாஜி நகர் வார்டு கழக செயலாளர் பிரகாஷ்,ஞானசேகர்.செல்வம். பாஸ்கர். குணசேகரன், காளிதாஸ். ரெமோ, ருத்ரகணபதி. ஜெரார்.சிவம். முருகன்,சேது,பரிமளா,எலிசியா , முத்தாள் லட்சிய ஜனநாயக கட்சி மாநில செயலாளர் லட்சுமணன். உப்பளம் தொகுதி தலைவர் அலெக்ஸ் ,தொகுதி செயலாளர் குணசீலன்,தொகுதி துணை தலைவர் மிஷேல் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழ்நாடு புதுச்சேரி பார்கவுன்சிலுக்கு இன்று தேர்தல் முதன் முறையாக க்யூஆர் கோடு முறை அறிமுகம்:

### தேர்தல் அதிகாரி நீதிபதி கே.என்.பாஷா தகவல்

சென்னை: மார்ச்.30–

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் தேர்தல் நாளை நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் தற்போதைய தலைவர் பி.எஸ். அமல்ராஜ், உறுப்பினர்கள் ஆர்.சி.பால்கனகராஜ், ஜி.மோகனகிருஷ்ணன், டி.செல்வம், எம்.வேல்முருகன், பிரிசில்லா பாண்டியன், இரா.கிரிராஜன் எம்பி உள்ளிட்டோரும் புதிதாக வழக்கறிஞர்கள் டி.பிரசன்னா, என்.விஜயராஜ், செ.ரூபன் உள்ளிட்ட 143 பேர் போட்டியிடுகிறார்கள். தேர்தல் பிரசாரம்



நேற்று முன்தினம் மாலை 5 மணியுடன் முடிவுற்றது.

இந்நிலையில், பார்கவுன்சில் தேர்தல் குறித்து தேர்தல் அதிகாரியும் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியுமான கே.என்.பாஷா மற்றும் பார் கவுன்சில் தேர்தலை நடத்தும் உயர் மட்டக்குழு உறுப்பினருமான மூத்த வழக்கறிஞர் இ.ஓம்பிரகாஷ் ஆகியோர் கூறும்போது, "உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி வரும் 30ம் தேதி பார்கவுன்சில் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காக தமிழகத்தில் 166 வாக்குச்சாவடி மையங்களும், புதுச்சேரியில் 2 மையங்களும் என மொத்தம் 168 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக க்யூஆர் கோடு முறையில் வாக்காளர்களின் விவரங்கள் சரிபார்க்கப்படவுள்ளது. தேர்தல் மார்ச் 30ம் தேதி காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்" என்றனர்.

## புலியூர் கண்டிகை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சீதா ராமர் திருக்கோவிலில் ஸ்ரீ சீதாராமன் திருக்கல்யாண மஹோற்சவம் மற்றும் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சாய்பாபாவின் ஊஞ்சல் சேவை



திருவள்ளூர் மார்ச் 30 :

திருவள்ளூர் அடுத்த புலியூர் கண்டிகை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சீதா ராமர் திருக்கோவிலில் ஸ்ரீ சீதாராமன் திருக்கல்யாண மஹோற்சவம் மற்றும் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சாய் பாபாவின் ஊஞ்சல் சேவை வெகு விமர்சையாக நடைபெற்றது.

விழா கடந்த 25 ம் தேதி பந்தக்கால், கோ பூஜையுடன் தொடங்கியது.அதனைத் தொடர்ந்து ஸ்ரீ சீதாராமர் உற்சவமூர்த்தி திருமஞ்சனம், அபிஷேகம் நடைபெற்றது.பின்னர் சீர்வரிசை கொண்டு வருதல், பெண் அழைப்பு, சங்கல்பம் புண்யாஹவாசனம், மாங்கல்ய பூஜை, மாங்கல்ய தாரணம் மாலை மாற்றுதல் பூர்ணாஹீதி, பட்டாபிஷேகம் நடந்தேறின.

மேலும் சாய்பாபா ஆலயத்தில் ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு சாய்பாபாவின் ஊஞ்சல் சேவை மஹோற்சவத்தை முன்னிட்டு காக்கட ஆரத்தி,துணி பூஜை மதியம், மதியான ஆரத்தி, தூப ஆரத்தி நடைபெற்றது. இதில் ஆலய நிர்வாகிகள் கிராம மக்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமியின் அருளை பெற்றனர். இதையடுத்து ஏராளமானவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இரவு ஸ்ரீ சீதாராமர் வீதி உலா புறப்பாடு நடைபெற்றது.

## நாமக்கல் அதிமுக வேட்பாளரை மாற்றக்கோரி கட்சி அலுவலகத்தை முன்னாள் எம்எல்ஏ பாஸ்கரின் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு.

நாமக்கல்: நாமக்கல் அதிமுக வேட்பாளரை மாற்றக்கோரி கட்சி அலுவலகத்தை முன்னாள் எம்எல்ஏ பாஸ்கரின் ஆதரவாளர்கள் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. நாமக்கல் தொகுதிக்கு முன்னாள் எம்.எல்.ஏ கே.பி.பி.பாஸ்கர், வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என அவரது ஆதரவாளர்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். இந்த நிலையில், நாமக்கல் சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக, மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ஸ்ரீதேவி பி.எஸ்.மோகன் அறிவிக்கப்பட்டுள்ளார்.



2026 தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் நடைபெற உள்ளதை முன்னிட்டு வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இலால்குடி சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட புள்ளம்பாடி பேரூராட்சியில் 100 % வாக்களிக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

# கரூரில் அனுமதியின்றி ஊர்வலம் முன்னாள் அமைச்சர் உள்பட 4 அதிமுக வேட்பாளர்கள் மீது வழக்கு

கரூர்: மார்ச்.30–

கரூர் மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்ற தொகுதிகளுக்கும் அதிமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அதன்படி கரூரில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், கிருஷ்ணராயபுரத்தில் திவ்யா, அரவக் குறிச்சியில் செல்வ குமார், குளித்தலை யில் கருணாகரன் ஆகியோர் போட்டியிடு கின்றனர்.



இவர்கள் நேற்றிரவு கரூர் லைட்ஹவுஸ் கார்னரில் உள்ள எம்ஜிஆர், ஜெயலிதா, அண்ணா சிலைகளுக்கு மாலை அணிவிக்க வந்தனர். அப்போது சுக்காலியூர் ரவுண்டானா வில் அதிமுகவினர் திரண்டு 4 வேட்பாளர்களுக்கும் வரவேற்பு அளித்தனர். பின்னர் அங்கிருந்து வேட்பாளர்கள் திறந்த வாகனத்தில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். அப்போது வழிநெடுகிலும் தொண்டர்கள் மலர் தூவியும், பட்டாசு வெடித்தும் வரவேற்றனர். இந்த திடீர் ஊர்வலத்தில் 50 இருசக்கர வாகனங்கள், 20 நான்கு சக்கர வாகனங்களில் கட்சியினர் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் பறக்கும் படை அதிகாரிகள் புகாரின் பேரில் அனுமதி இன்றி சட்டவிரோதமாக ஒன்று கூடுதல், மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் வகையில் வாகனத்தை ஓட்டுதல், அனுமதியின்றி வெடி வெடித்தல், கட்சி கொடியை பயன்படுத்துதல், அதிகாரிகள் உத்தரவை மீறுதல் உள்ளிட்ட 5 பிரிவுகளின் கீழ் 4 வேட்பாளர்கள் உள்பட 500 பேர் மீது கரூர் நகர போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். மேலும், சிசிடிவி ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் பதிவு எண்களை ஆராய்ந்து பறிமுதல் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக போலீசார் தெரிவித்தனர்.

# இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போட்டியிடும் 2 தொகுதி வேட்பாளர் பட்டியல்:

## தேசிய தலைவர் காதர் மொகிதீன் அறிவிப்பு

சென்னை: மார்ச்.30–

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் காதர் மொகிதீன் நேற்று வெளியிட்ட அறிவிப்பு: திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீனும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதை தொடர்ந்து இந்த இரண்டு தொகுதிகளில் போட்டியிட விரும்புவோரின் விருப்ப மனுக்கள் பெறப்பட்டு நேற்று நேர்காணல் நடந்தது.இந்தியா சுற்றுலா



இறுதியில் இரண்டு தொகுதிகளுக்கும் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பாபநாசம் தொகுதியில் மாநிலச் செயலாளர் ஏ.எம். ஷாஜஹான், வாணியம்பாடி தொகுதியில் திருப்பத்தூர் மாவட்ட முதன்மை துணைத் தலைவர் எஸ்.எஸ்.பி. சையத் பாரூக் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தமிழ்நாட்டின் 234 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்து மு.க.ஸ்டாலினை முதல்வராக அரியணை ஏற்றி தமிழ்நாட்டில் நல்லரசு அமைய முழுமையாக செயல்பட்டு சாதிப்போம்.

# ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழக கூட்டணி சசிகலாவின் தலைமையிலான அ இ பு ம மு க மற்றும் செங்கோல் நீதி கட்சியுடன் இணைந்து போட்டி.!!!.

## ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் அறிவிப்பு.



புதுச்சேரி, மார்ச்.30–

புதுச்சேரி மக்களை ஏமாற்றும் அரசியல் வியாபாரிகள் மற்றும் அரசியல் கட்சிகளையும் மக்கள் விரோத ஆட்சியை நடத்தியவர்களுக்குசரியான பாடம் புகட்டுவதற்கும் , மக்களுக்கான ஒரு நல்ல ஆட்சியை ஏற்படுத்த தான் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் மற்ற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்தது. அதனை தொடர்ந்து கூட்டணியை மேலும் வலுப்படுத்த சசிகலாவின் தலைமையிலான அனைத்து இந்திய புரட்சி தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம், புதுவையில் செங்கோல் நீதி மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் அகில இந்திய சிங்காரவேலர் முன்னேற்றக் கழகம் ஆகிய கட்சிகளுடன் இணைந்து புதுவையில் வலுவான மக்கள் நல கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது . இந்த மக்கள் நல கூட்டணியின் சார்பாக பதினேழு வேட்பாளர்களுடன் புதுச்சேரி சட்டமன்ற தேர்தலை சந்திக்கிறோம். வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் துறையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டணி கட்சிகளின் சின்னங்களில் போட்டியிடுகிறார்கள். ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர்களும் கூட்டணி கட்சிகளின் சின்னங்களில் போட்டியிடுகிறார்கள்.

எழுபது ஆண்டு காலமாக அரசியல் என்கிற போர்வையில் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தி வந்த அரசியல் கட்சிகளையும் அரசியல் வியாபாரி களையும் விரட்டியடித்து மக்களுக்கான ஒரு நல்ல ஆட்சியை உருவாக்க மக்கள் நல கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட சின்னங்களில் வாக்களிக்க அன்புடன் வேண்டுகிறேன்.

மேலும் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் விசுவாசிகள் அனைவரும் கூட்டணி தர்மத்தை கடைபிடித்து மக்கள் நல கூட்டணி ஆட்சி அமைக்க கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற முழு ஒத்துழைப்பு கொடுத்து உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி

## செங்கல்பட்டு ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் துவக்கிவைப்பு

செங்கல்பட்டு: மார்ச்.30–

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியிலிருந்து மாமல்லபுரம் வரை சுமார் 35 கி.மீ தூரம் 11,800 பேர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ்.மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.



இதுகுறித்து அரசு வெளிட்டுள்ள அறிக்கையில், ‘ செங்கல்பட்டு மாவட்டம், சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் மிதிவண்டி விழிப்புணர்வு பேரணியையையும், விழிப்புணர்வு சுடர் விளக்கினையும் தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

அதனை தொடர்ந்து 100 சதவிகித வாக்குபதிவை வலியுறுத்தி கல்லூரி கூட்டரங்கில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இப்பேரணி 5 கி.மீ பயணித்து திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட படூர் ரவுண்டானாவை சென்றடைந்தது. அங்கு தேர்தல் வழிப்புணர்வு சுடர்விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு தயார் நிலையில் இருந்த பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் 100 நபர்களின் இருசக்கர மோட்டார் வாகன அணிவகுப்பினை கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வழிநடத்தி சென்ற வாகன பேரணி கேளம்பாக்கத்தில் முடிவடைந்தது. அங்கு தேர்தல் விழிப்புணர்வு சுடர் விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு 50 மூன்று சக்கர ஆட்டோ தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவளத்தில் மகளீர் சுய உதவிக்குழுவினரின் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி நடத்தப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி யினை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார்.

அதன் பின்னர், 50 நான்கு சக்கர மகிழுந்துகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள். தொடர்ந்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற படகுகள் மூலம் மீனவர்கள் நடத்திய தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தேர்தல் ஆட்சியர் பார்வையிட்டார். மேலும் 100 சதவிகித வாக்குபதிவினை வழியுறுத்தி அமைக்கப்பட்டிருந்த தேர்தல் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினை ஆட்சியர் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து 100 சதவிகித வாக்குப் பதிவினை வலியுறுத்தி மாமல்லபுரத்தில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், ”எனது வாக்கு எனது பெருமை” என்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் ஒட்டப்பட்ட அரசு பேருந்துகளை ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) மணியரசன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஸ்ரீதேவி, ஊரக வளர்ச்சி(மகளீர் திட்டம்) திட்ட இயக்குநர் லோகநாயகி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்’ எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மறைந்த பெண் காவலர் குடும்பத்திற்கு ரூ.24.83 லட்சம் நிதியுதவி: 2009 பேட்ச் காவலர்களின் நெகிழ்ச்சி நடவடிக்கை!





கிருஷ்ணகிரி, மார்ச். 30

தமிழக காவல் துறையில் 2009 ஆம் ஆண்டு பணியில் சேர்ந்த காவலர்கள் ஒன்றிணைந்து நடத்தி வரும் “உதவும் அன்பு உள்ளங்கள்” குழு சார்பில், உயிரிழந்த பெண் காவலரின் குடும்பத்திற்கு சுமார் 25 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டது.

தமிழக காவல்துறையில் கடந்த 2009 ஆம் ஆண்டு பணி நியமனம் பெற்ற காவலர்கள், பணியின் போது எதிர்பாராத விதமாக உயிரிழக்கும் சக நண்பர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் “2009 பேட்ச் காவல்துறை உதவும் அன்பு உள்ளங்கள்” என்ற அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் காவலர். கலைவாணி அவர்கள், கடந்த 28/10/2025 அன்று பணியில் இருந்தபோது காலமானார். அவரது குடும்பத்தின் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, இக்குழுவின் உறுப்பினர்கள் மாநிலம் முழுவதும் நிதி திரட்டினர்.

அதன் மூலம் திரட்டப்பட்ட ரூ.24,83,894 (இருபத்தி நான்கு லட்சத்து எண்பத்தி மூவாயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று நான்கு ரூபாய்) நிதியுதவித் தொகை, இன்று (29/03/2026) மறைந்த காவலர் கலைவாணியின் குடும்பத்தினரிடம் முறைப்படி ஒப்படைக்கப்பட்டது.

இக்குழுவினர் தமிழகம் முழுவதும் மாவட்ட வாரியாக நிதி திரட்டி, இதுவரை பணியின் போது உயிரிழந்த 43 காவலர்களின் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.10,32,94,705 (பத்து கோடியே முப்பத்தி இரண்டு லட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து எழுநூற்று ஐந்து ரூபாய்) நிதியுதவியாக வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு வழங்கும் சலுகைகளுக்குக் காத்திருக்காமல், சக பணியாளர்களே ஒன்றிணைந்து ஒரு பெரிய தொகையைத் திரட்டித் தருவது காவல்துறை வட்டாரத்திலும் பொதுமக்கள் மத்தியிலும் நெகிழ்ச்சியையும், பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...



திருவண்ணாமலை மாவட்டத்தின் 7 திமுக வேட்பாளர்களான திருவண்ணாமலை எ.வ.வேலு, கீழ்பென்னாத்தூர்கு.பிச்சாண்டி, கலசப்பாக்கம் சரவணன், ஆரணி மகாலட்சுமி கோவர்தனன், செய்யாறு ஒ.ஜோதி, வந்தவாசிஎஸ்.அம்பேத்குமார், செங்கம்கிரி ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்துக்களை பெற்றனர். இந்த நிகழ்வில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தரணிவேந்தன் உடனிருந்தார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421